**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.**

**முன்னிலை : திருமதி. G. சுபத்திராதேவி., எம்.எல்.,**

**முதன்மை மாவட்ட நீதிபதி, கடலூர்.**

**2026-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 15-ஆம் நாள் புதன் கிழமை**

**Tr.O.P. No.132/2025**

**(TN CD 01-008898-2025)**

1. பழனிவேல், த/பெ. ராஜமாணிக்கம், வயது 50, வசிப்பிடம் முருகன்குடி கிராமம் மற்றும் அஞ்சல், திட்டக்குடி வட்டம், கடலூர் மாவட்டம்.

2. செல்வமணி, த/பெ. வீரமணி, வயது 59, வசிப்பிடம் முருகன்குடி கிராமம் மற்றும் அஞ்சல், திட்டக்குடி வட்டம், கடலூர் மாவட்டம்.

3. அ.கொளஞ்சி, க/பெ. அழகுதுரை, வயது 54, வசிப்பிடம் நெ.303, சிவன் கோயில் தெரு, பெரியாக்குறிச்சி கிராமம், செந்துரை வட்டம், அரியலூர் மாவட்டம்.

.. மனுதாரர்கள்

/எதிராக/

1. பாரதிராஜா (எ) பாரதிராஜ், த/பெ. பழனிவேல், வயது 30, வசிப்பிடம் முருகன்குடி கிராமம் மற்றும் அஞ்சல், திட்டக்குடி வட்டம், கடலூர் மாவட்டம்.

2. அஜீத்குமார், த/பெ. சுப்பிரமணியன், வயது 31, வசிப்பிடம் முருகன்குடி கிராமம் மற்றும் அஞ்சல், திட்டக்குடி வட்டம், கடலூர் மாவட்டம்.

3. கதிர்வேல், த/பெ. கந்தசாமி, வயது 66, வசிப்பிடம் முருகன்குடி கிராமம் மற்றும் அஞ்சல், திட்டக்குடி வட்டம், கடலூர் மாவட்டம்.

4. மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர்.

5. கோட்டாட்சியர், கோட்டாட்சியர் அலுவலகம், விருத்தாசலம், விருத்தாசலம் வட்டம், கடலூர் மாவட்டம்.

6. தாசில்தார், வட்டாட்சியர் அலுவலகம்,திட்டக்குடி, திட்டக்குடி வட்டம், கடலூர் மாவட்டம்.

7. குறுவட்ட நில அளவர்,குறுவட்ட நில அளவர் அலுவலகம், ( பெண்ணாடம் குறுவட்டம்), வட்டாட்சியர் அலுவலகம், திட்டக்குடி, திட்டக்குடி வட்டம், கடலூர் மாவட்டம்.

8. வட்ட சார் ஆய்வாளர்,வட்ட சார் ஆய்வாளர் அலுவலகம், பெண்ணாடம், திட்டக்குடி வட்டம், கடலூர் மாவட்டம்.

9. கிராம நிர்வாக அலுவலர் , கிளிமங்கலம் கிராமம் அலுவலகம், கிளிமங்கலம், திட்டக்குடி வட்டம், கடலூர் மாவட்டம்.

10. மாவட்ட பதிவாளர், மாவட்ட பதிவாளர் அலுவலகம், விருத்தாசலம், விருத்தாசலம் வட்டம், கடலூர் மாவட்டம்.

11. சார்பதிவாளர்,சார்பதிவாளர் அலுவலகம், பெண்ணாடம், திட்டக்குடி வட்டம், கடலூர் மாவட்டம்.

12. செ.கொளஞ்சியம்மாள், க/பெ. செல்வராஜ், வயது 68, வசிப்பிடம் முருகன்குடி கிராமம் மற்றும் அஞ்சல், திட்டக்குடி வட்டம், கடலூர் மாவட்டம்.

13. வளர்மதி, க/பெ. ஆறுமுகம், வயது 56, முருகன்குடி கிராமம் மற்றும் அஞ்சல், திட்டக்குடி வட்டம், கடலூர் மாவட்டம். .. எதிர்மனுதாரர்கள்

திட்டக்குடி, கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்.24/2024-ஐ திரும்ப பெற்று, மேற்படி அசல் வழக்கினை, திட்டக்குடி, முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு மாற்றி, அந்நீதிமன்ற அசல் வழக்கு எண்.109/2023 என்ற வழக்குடன் கூட்டு விசாரணை (Joint Trial) நடத்தவும், இம்மனுவின் செலவு தொகை மனுதாரர்களுக்கு, எதிர்மனுதாரர்கள் மூலம் கிடைத்திடும் வகைக்கும், இந்நீதிமன்றத்திற்கு யுக்தமாய் தோன்றும் இதர நியாய பரிகாரங்கள் கிடைத்திடும் வகைக்கும் உத்தரவிடக்கோரி, மனுதாரர்கள், உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 24-ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

இம்மனு 16.07.2025 மற்றும் 25.08.2025 ஆகிய தேதிகளில் தாக்கல் செய்யப்பட்டு 29.08.2025 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. இம்மனுவில் நீதிமன்றக் கட்டணம் ரூ.50/- செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனுவானது என் முன்பு 18.03.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.வெங்கடேசன் அவர்களும், 4 முதல் 11 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.கே.இராமன் அவர்கள் முன்னிலையாகியும், 1,2,3, 12 மற்றும் 13 எதிர்மனுதாரர்களை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால், 1,2,3, 12 மற்றும் 13 எதிர்மனுதாரர்களைத் தோன்றாத் தரப்பினர்களாகக் கருதப்பட்டும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பின்வருமாறு வழங்கும்

## உத்தரவாணை

1. இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.
2. திட்டக்குடி, கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்கள், அசல் வழக்கு எண்.24/2024-ஐ, திட்டக்குடி, முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.
3. திட்டக்குடி, முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்கள், மேற்படி அசல் வழக்கு எண்.24/2024-ஐ பெற்று, திட்டக்குடி, முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்.109/2023 என்ற வழக்குடன் இணைத்து கூட்டு விசாரணை நடத்தவும் (Joint Trial) உத்தரவிடப்படுகிறது.
4. செலவுத் தொகை இல்லை.

என் கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் 2026-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15-ஆம் நாள் என்னால் இடப்பட்டது.

SUBATHIRA DEVI G Digitally signed by SUBATHIRA DEVI G Date: 2026.05.21 17:26:30 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

கடலூர்.

~~~~

**உத்தரவாணை**

Tr.OP.No.132/2025

**நாள் 15.04.2026**

~~~~~